# பொதுக்காலம் 30 ஆம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு - A

2020-10-25

**இன்றைய வாசகங்கள்:**

விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம் 22: 21-27,
திருப்பாடல் 18: 1-2 2-3. 46,50,
திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 5-10,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22: 34-40

## திருப்பலி முன்னுரை:

என் கற்பாறையாம் ஆண்டவர் போற்றப் பெறுவராக! என் மீட்பராம் கடவுள் மாட்சியுறுவராக!.

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! நமக்கு மீட்பளிக்கும் வல்லமையும், அரணும், கற்பாறையும், கோட்டையுமான நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல் வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும் அன்புடன் இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம். இன்று நாம் ஆண்டின் பெதுக்காலம் முப்பதாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

நம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் நம் ஆண்டவராகிய கடவுளிடம் அன்புசெலுத்துவதும். நம்மீது நாம் அன்பு கூர்வதுபோல நமக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வதும்' திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் அடிப்படையாக அமைகின்றன, என்னும் வாழ்விற்கான உயர் நெறிமுறையினை மீளவும் இறை வார்த்தைகள் வழியாக இறைவன் நமக்கு நினைவுபடுத்துகின்றார். இந்த உயர் நெறிமுறையினைக் கருத்தோடும், பொறுப்புணர்வோடும் நாம் ஏற்றுக்கொண்டு அதனை நம் இதயத்தில் பதித்தவர்களாய், அன்பு, இரக் கம், நற்பண்புகள் ஆகியவற்றோடு வாழவும், வளரவும் நம்மை நேர்மையான உள்ளத்தோடு அர்ப்பணித்தவர்களாய் இத் திருப்பலியில் பங்கேற் றுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள்,அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் அனைவரும்: உம்மீது அன்பு கொண்டவர்களாய், காலத்தின் அடையாளங்கள் வழியாக நீர் வெளிப்படுத்துவதை நன்கு புரிந்து கொண்டு, திருச்சட்ட நூல் முழுமைக்கும், இறைவாக்கு நூல்களுக்கும் அடிப்படையாக இருப்பவற்றை முழுமையாக வாழுவதற்கு வேண்டிய மனப்பக்குவத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
என் மனதிலும், நாவிலும் தூய்மையைத் தாரும். உமது தூய ஆவியினால் என்னை நிரப்பும். உள் நோக்கமின்றிப் பிறருடன் உரையாட, உறவாட எனக்கு ஆற்றல் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என் ஆற்றலாகிய தந்தையே இறைவா!**
உமது பிள்ளைகளாகிய நாங் கள் அனைவரும், எம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் எம் ஆண்டவராகிய உம்மையும், எம் அயலவரையும் அன்பு செய்யவும், அன்பு, இரக்கம், நற்பண்புகள் ஆகியவற்றோடு வாழவும் வளரவும் வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலமும் வளமும் தந்தருளும் எம் இறைவா!**
உலக மக்கள் அனைவரும், உமது உயிருள்ள பிரசன்னத்தை உமது இறைவார்த்தை யிலும், நற்கருணையிலும், திருவருட் சாதனங்களிலும் கண்டுணர்ந்து சமத்துவ மனநிலையோடும், பொது நலத்தோடும் வாழுவதற்கு வேண்டிய ஆற்றலை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உண்மை நெறியைக் கற்பிக்கும் தந்தையே இறைவா!**
எமது பிள்ளைகள் அனைவரும் தீமையின் பிடியில் சிக்கிவிடாமலும், ஆன்மிக வாழ்விலிருந்து விலகிவிடாமலும் இருக்க அவர்களை ஆட்கொண்டு, அவர்க ளுக்கு வேண்டிய தூய ஆவியாரின் ஞானத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!**
இந்தத் தொற்றுநோய் காலத்தில் உமது மக்களாகிய நாங்கள் படும் துன்பங்களை நீர் அறிவீர். விரைவில் நாங்கள் இதிலிருந்து விடுபடவும், அனைவரும் மீண்டும் தம் வளமையான வாழ்விற்குத் திரும்பத் தேவையான சூழலைத்தர வேண்டியும், மாணவச்செல்வங்கள் நல்ல மனநிலையும், ஞானத்தையும் பெற்று நிம்மதியாகக் கல்விக் கற்றுத் தேர்ந்திடவும் உமது அருளைப் பொழியுமாறு இறைவவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.